# 7 மொழி விடுகதைகள்

**இலக்கு**

கவர்ச்சியுள்ள எழுத்து ஒப்படைகளை எழுதவும் அவற்றைப் பின்னர் வகுப்புகளில் புதிர்களாகவும் விடுகதைகளாகவும் பயன்படுத்தும் செயல்நோக்கினை வளர்ப்பதற்கு

## 1. விடை வாக்கியங்கள்

1 - 3 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

அ) ஆசிரியர் வகுப்புடன் சொல் விளையாட்டை மேற்கொண்டுள்ளார். இரண்டு எடுத்துக்காட்டுகள் பலகையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் விடைகள் மறைந்துள்ளன. எடுத்துக்காட்டு: கரைவேட்டி தைத்து காசுக்கு விற்றான். விடை: "கதைகாவி". மாணவர்கள் வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு சொல்லின் முதலெழுத்துகளை ஒன்றாகச் சேர்க்குமிடத்து மறுமொழிச் சொல்லைக் காணலாம் என்னும் விதியினை மாணவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஆ) மாணவர்கள் ஒன்றாக 1 – 2 வாக்கியங்களைக் கொண்டு தனியாக அல்லது இணையாக செயற்படுகின்றனர். அவர்கள் தாள் துண்டுகளைப் பெறுகின்றனர். அவற்றில் அவர்கள் ஒரு பக்கத்தில் புதிர் வாக்கியத்தை எழுதி மறு பக்கத்தில் மறுமொழியை எழுதுவர்.

இ) முடித்துவைக்க, தாள் துண்டுகள் இணையர்களுக்கிடையே பரிமாற்றம் செய்ய மாணவர்கள் புதிர்களை விடுவிக்கின்றனர்.

## 2. விவரணப் புதிர்

4 - 9 ஆந் தரம் | 40 மணித்துளிகள்

கருவிகள்:
படங்களை வெட்டி எடுக்கக் கூடிய இதழ்கள்

அ) மாணவர்கள் வகுப்புக்குப் பொருள்கள் (கம்பளிக் காலுறைகள்) கொண்டுவருகின்றனர். பின்னர் அப்பொருளின் படத்தைக் கீறுகின்றனர் அல்லது மாணவர்களோ ஆசிரியரோ வழங்கிய இதழ்களிலிருந்து ஒரு படத்தையோ அல்லது ஒளிப்படத்தையோ தெரிவுசெய்வர். ஒரு தாள் துண்டில் பொருள், கீறியபடம், அல்லது படம்/ஒளிப்படம் பின்னர் தாள் துண்டில் ஒட்டப்படும்.

ஆ) மாணவர்கள் தங்கள் பொருளை அல்லது படத்தை, பொருளின் பெயரையோ படத்தின் அல்லது ஒளிப்படத்தின் ஆளையோ குறிப்பிடாமல் சில வாக்கியங்களில் விவரிப்பர். அதற்குப் பதிலீடாக அவர்கள் அதனை "என் உருப்படி" அல்லது "என் படம்" (எடுத்துக்காட்டு: "என் பொருள் சூடானது கம்பளியினால் ஆக்கப்பட்டது. குளிர் காலத்தில் உங்கள் கால்களைச் சூடாகவைத்திருக்கும்" (விடை: கம்பளிக் காலுறை). என் படம் உயர் மலையிலிருந்து வீழும் நீரைக் காட்டுகின்றது" (விடை: நீர்வீழ்ச்சி).

இ) படங்கள் வகுப்பறையின் இடது பக்கத்தில் தொங்கவிடப்படுகின்றன எழுத்துருக்கள் வலப்பக்கத்தில் இடப்படுகின்றன. ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு எண்ணும், எழுத்துருக்கு, எழுத்தும் ஒதுக்குகின்றனர்.

ஈ) செயற்பாடு: எழுத்துருக்களைப் படித்து பொருந்தும் படத்தை அல்லது பொருளை கண்டறிய முயற்சிக்கவும். விடைகளை எழுதுக (எ-டு: 2 – D, 4 – B).

## 3. குறுக்கெழுத்துப் புதிர்களை உருவாக்கல்

5 - 9 ஆந் தரம் | 60 மணித்துளிகள்

கருவிகள்:
குறுக்கெழுத்துப் புதிர்கள்

ஆ) இந்நெறிமுறையைப் பின்பற்றி, மாணவர்கள் தம் குறுக்கெழுத்துகளை ஆக்கி புதிர்களைத் தீர்க்கத் தம்முள் பரிமாற்றம் செய்வர். குறுக்கெழுத்துப் புதிர்கள் குறிப்புக்காட்டி: இலத்தீன் நெடுங்கணக்கை அடிப்படையாகக்கொண்டு இணையத்தில் கிடைக்கும் பொருத்தமான கருவிகளைப் பயன்படுத்தி குறுக்கெழுத்துப் புதிர்களை எளிதாக ஆக்கலாம். எடுத்துக்காட்டு: பார்க்கவும் http://www.xwords-generator.de அல்லது http://www.armoredpenguin.com/crossword

அ) ஆசிரியரும் மாணவர்களும் கூட்டாக குறுக்கெழுத்துப் புதிர்களை முதல் மொழியில் அல்லது இரண்டாம் மொழியில் பகுப்பாய்வு செய்வதுடன் தாமே ஒரு குறுக்கெழுத்துப் புதிரை ஆக்குதற்குரிய நடைமுறைகள் அல்லது "செய்முறைகள்" பற்றிக் கலந்துரையாடல்.